## இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் - 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

| | |
|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 18 | வே உட, எரகம, உஸவெவ, எலயாபத்துவ, மஹியங்கனை, யடியன, பிங்கிரிய தொழிற்சாலைகளினதும் தலைமை அலுவலகத்தினதும் ரூபா 18,579,229 பெறுமதியான வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், கிணறுகள் மற்றும் தொட்டிகள், மின்சார விநியோகக் கட்டளைகள், ஓட்டு அச்சுக்கள் முழுமையாகத் தேய்விடப்பட்டு முடிந்திருந்த போதிலும் நியமத்தின் படி மீள விலைமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் சேதமுற்ற இருப்பு மீதிகளின் மொத்தம் ரூபா 283,409 ஆக காணப்பட்டதுடன் இந்த இருப்பு மீதி இறுதிக் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதிக் கணக்குடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளின் மொத்தத்தில் ரூபா 25,345,025 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 453,199 நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் கொள்வனவாக பதியப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் எரகம தொழிற்சாலைக்கு சொந்தமான இயந்திர உபகரணக் கொள்வனவுகளின் ரூபா 187,484 ஆன மீதி மீளாய்வாண்டின் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இப்பெறுமதி 2012 ஆம் ஆண்டின் கொள்வனவாகப் பதியப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் நானாவித வருமானத்தின் கீழ் இனங்காணப்பட முடியாதிருந்த வருமான மீதியான ரூபா 50,650 இலாபநட்டக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1990 திசெம்பர் 20 ஆந் திகதிய பீஈ1/000/நன்கொடைகள் ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் நன்கொடைகளை வழங்குகையில் அதன் நிதி ரீதியான பெறுமதியினைக் கருத்திற்கொள்ளாது அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கூட்டுத்தாபன முகாமைத்துவத்தினால் அரசாங்க வளங்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டிருந்த முன்பள்ளி பல்சுவை நிகழ்ச்சிக்கான நன்கொடையாக ரூபா 20,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு | கூட்டுத்தானத்தில் பணிபுரியும் ஊழியர்களிற்காக 2010 யூலை தொடக்கம் 2011 திசெம்பர் வரையான ரூபா 39,243,295 உதவு தொகையினை உரிய நேரத்தில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவு | (i) பதவியணி தொடர்பில் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்று அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப் பட்டிருக்கவில்லை. |
| | (ii) வரிசை அமைச்சின் செலவினங்களை தொடர்புடைய கூட்டுத்தாபனம்/சபைகளினால் செய்யப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த மே தின ஊர்வலத்தில் பங்குபற்றியோருக்கு மதியநேர உணவினை வழங்குவதற்காக ரூபா 50,040 அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2011 ஏப்ரல் 27 ஆந் திகதிய கடிதத்தின் படி கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 104,172,501 தேறிய பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 77,259,222 ஆகும். இதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 26,913,279 பின்னடைவொன்றைக் காண முடிந்தது.

மீளாய்வாண்டிலும் விற்பனைக் கிரயத்தினை ஈடுசெய்வதற்கு விற்பனைப் பெறுமதி போதாதிருந்தமை காரணமாக மொத்த நட்டமொன்று காண்பிக்கப்பட்டது. இதன் படி மொத்த நட்டம் ரூபா ரூபா 86,594,715 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் மொத்த நட்டம் ரூபா 55,453,982 ஆகக் காணப்பட்டது. மொத்த நட்டத்தினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 57% இனால் அதிகரித்திருந்தது. அதேபோன்று முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 34,554,042 ஆல் அல்லது 20% ஆல் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக 8 ஓட்டுத் தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் மீளாய்வாண்டில் சகல தொழிற்சாலைகளும் நட்டத்தில் இயக்கிச் செல்லப்பட்டிருந்ததுடன் கடந்த 5 ஆண்டுகளில் தொழிற்சாலைகளின் இலாபநட்ட நிலைமை வருமாறு.

| ஓட்டுத் தொழிற்சாலை | ஆண்டிற்கான மிகை / (பற்றாக்குறை) ரூபா மில்லியனில் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பங்கதெனிய | (0.48) | (0.96) | (0.43) | (0.15) | (12.44) |
| வேஉட | (11.06) | (11.06) | (18.59) | (18.45) | (10.40) |
| எலயாபத்துவ | (29.41) | (20.69) | (25.45) | (18.52) | (0.49) |
| பிங்கிரிய | (6.84) | (7.47) | (7.39) | (5.66) | (7.04) |
| மஹியங்கன | (20.98) | (15.46) | (12.39) | (14.10) | (130.93) |
| யடியன | (14.38) | (12.07) | 12.26 | (11.37) | (12.35) |
| உஸ்வெவ | (17.13) | (13.80) | (14.17) | (10.59) | (2.80) |
| ஏரகம | (4.15) | 3.83 | 20.50 | 26.31 | 30.16 |

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் உற்பத்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த ஓடுகள், செங்கற்கள் மற்றும் ஏனைய பொருள் அலகுகளின் எண்ணிக்கை 11,644,890 ஆன போதிலும் உள்ளபடியான உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 4,223,747 ஆனமையால் அது மதிப்பிடப்பட்ட உற்பத்தியில் 36% ஆகும். ஆகையால் 64% ஆன அளவினால் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் தொழிற்சாலைகளின் மதிப்பிடப்பட்ட விற்பனைகளை உள்ளபடியான விற்பனைகளுடன் ஒப்பீடு செய்தபோது பின்வருமாறு வேறுபாடு காணப்பட்டது.

(i) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக 8 ஓட்டுத் தொழிற்சாலைகளில் 07 எதிர்பார்த்த விற்பனைகளை அடைந்து கொண்டிருக்கவில்லை. அடைந்து

கொள்ள முடியாதிருந்த சதவீதம் 36% இலிருந்து 86% வரையான விச்சில் காணப்பட்டது.

(ii) தொழிற்சாலைகளில் விற்பனையினை மேம்படுத்துவதற்காக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் 6 தொழிற்சாலைகளிலும் விற்பனை விநியோகச் செலவினம் எதுவும் காணப்படாதிருந்ததுடன் எலயாபத்துவ தொழிற்சாலையில் மாத்திரம் காணப்பட்ட விற்பனை விநியோகச் செலவினம் ரூபா 1,063,243 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டின் போது பின்வருமாறு தொழிற்சாலைகளில் இலாபநட்டங்கள் எதிர்பாக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான இலாபநட்டங்களிற்கிடையே பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன.

(i) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகள் அனைத்தும் மீளாய்வாண்டில் நட்டத்தில் இயங்கியிருந்தன.

(ii) மீளாய்வாண்டில் 05 தொழிற்சாலைகள் இலாபத்தினை எதிர்பார்த்திருந்த போதிலும் அந்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாது போயிருந்தது.

(iii) ஏரகம தொழிற்சாலையில் கடந்த 05 ஆண்டுகளில் இலாபம் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 4.148 மில்லியன் நட்டத்தினை ஈட்டியிருந்தது. இதனை எதிர்பார்த்த நிலையுடன் ஒப்பிடுகையில் ரூபா 27.674 மில்லியன் குறைவாகும்.

## 4.2 தீர்க்கப்படாத மீதிகள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 175,880,949 கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீதி ரூபா 163,811,497 ஆகும். இவற்றை உரியபடி தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மட்பாண்ட கம்பனி என வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்கொடுத்தோராக முறையே ரூபா 22,375,917 மற்றும் ரூபா 48,602,070

மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டன. இக்கம்பனி 2002 ஆம் அண்டில் மூடப்பட்டிருந்த போதிலும் இம்மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபன முகாமைத்துவத்தினால் மீளாய்வாண்டில் தொழிற்சாலைகளில் காணப்பட்ட ரூபா 4,906,258 மொத்தமான பொறுப்புக்கள் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏரகம தொழிற்சாலையில் தற்போது சேவையில் இல்லாத 20 நபர்களின் விழா முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 12,550 இனையும் 04 ஊழியர்களின் ஓட்டுக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 37,684 இனையும் அறவீடு செய்ய முடியாது போயிருந்தது.

(ஈ) மஹியங்கனை தொழிற்சாலையின் 1982 – 1987 ஆண்டு வரையிலான காலத்திற்குரிய விழா முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 2,550 இனை அறவீடு செய்ய முடியாது போயிருந்தது.

(உ) உஸ்வெவ தொழிற்சாலையின் 13 ஊழியர்களிற்குரிய விழா முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 12,480 இனையும் ஓட்டுக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,998 இனையும் அறவீடு செய்ய முடியாது போயிருந்தது.

(ஊ) தலைமை அலுவலகத்தின் வியாபாரக் கட்னபட்டோர் மீதியான ரூபா 60,743 ஆனது 2008 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வந்திருந்ததுடன் அம்மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பங்கதெனிய தொழிற்சாலை

-----------------------------------------------

(i) இத்தொழிற்சாலை கடந்த 10 ஆண்டுகளிற்கு முன்பு மூடிவிடப்பட்டிருந்த போதிலும் வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 314,360 மற்றும் செரமிக் லிமிடட் இடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,476,854 மீதியினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவருகின்ற மொத்தம் ரூபா 13,363,260 வரிகளை ஏனைய கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைத்திருந்ததுடன் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii)பங்கதெனிய ஓட்டுத் தொழிற்சாலையினால் செலுத்தப்பட வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 1,058,182 ஆக காணப்பட்டதுடன் 2012 பெப்ரவரி

வரை அத்தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பங்கதெனிய ஓட்டுத் தொழிற்சாலை 2003 மார்ச் மாதத்திலிருந்து மூடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரை ரூபா 744,165 பெறுமதியான ஓடுகளின் இருப்பொன்று தொழிற்சாலை வளவில் காணப்பட்டது. இந்த இருப்பினை விற்பனை செய்வதற்கு, ஏலமிடுவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பங்கதெனிய ஓட்டுத் தொழிற்சாலை ஏறத்தாழ 10 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,118,370 ஆகும். 07 ஆண்டுகளின் பின்னர் தொழிற்சாலையின் சகல கட்டிடங்களையும் உடைத்து அகற்றுவதற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் இப்பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. முன்னைய ஆண்டில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியாது போயிருந்தது.

(ஏ) எலயாபத்துவ தொழிற்சாலையில் 2008 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து தனியார் நிறுவனமொன்றிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 844,622 இனை அறவிடுவதற்கு மிளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஏரகம தொழிற்சாலை மற்றும் பிரதான அலுவலகத்தில் இனங்காணப்படாத வைப்புக்கள் ரூபா 235,067 மீளாய்வாண்டின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த இனங்காணப்படாத வைப்பு மீதிகள் தொடர்பில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வேஉட தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 2009 பெப்ரவரி 19 ஆந் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் காணப்பட்ட முடிவடைந்த இருப்பு மீதி ரூபா 1,800,775 மற்றும் களிமண் இருப்பு மீதி ரூபா 1,865,620 இனை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி தொழிற்சாலைகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விறகு இருப்பு மிகவும் குறைவாகவே உள்ளதென்பதும் சில தொழிற்சாலைகளில் விறகு இருப்பு மீதி இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தடையேற்பட்டிருந்தது.

(ஓள) கூட்டுத்தாபனத்தின் யடியன, மஹியங்கன, வேஉட, எலயாபத்துவ, பிங்கிரிய மற்றும் உஸ்வெவ ஆகிய தொழிற்சாலைகளில் மொத்தம் ரூபா 572,844 மிகை இருப்புக்கள் காணப்பட்டன. இந்த இருப்பு மீதிகள் பதிவேடுகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஃ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தினால் இருப்புக்களை மதிப்பீடு செய்கையில் பிங்கிரிய தொழிற்சாலை மற்றும் பிரதான அலுவலகத்தில் ரூபா 30,939 இருப்பு பற்றாக்குறை காணப்பட்டது. இந்த இருப்பு பற்றாக்குறை தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) திறனற்ற முகாமைத்துவம் காரணமாக வழக்குக் கட்டணங்கள், மிகை அறவீடுகள் மற்றும் இழப்புக்களிற்காக மொத்தம் ரூபா 537,458 இனை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ங) தனியார் நிறுவனமொன்றினால் 2010 திசெம்பர் 29 ஆந் திகதி கட்டளையிட்டிருந்த 4,880 தரை ஓடுகளை உரிய பிரகாரம் விநியோகிக்க முடியாது போயிருந்ததுடன் கட்டளையிடப்பட்ட அளவில் 960 தரை ஓடுகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இரண்டு வாரங்களிற்குள் கட்டளையினை பூர்த்தி செய்யுமாறு குறித்த நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 02 மாதங்கள் கடந்த பின்னரும் குறித்த கட்டளையினை நிறைவேற்ற முடியாது பொனமையால் எஞ்சிய விநியோகிக்க முடியாது போயிருந்த பொருட்களிற்காக ரூபா 117,660 இனை மீளளிக்க வேண்டியேற்பட்டிருந்தது.

## 4.4 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 06 தொழிற்சாலைகளின் மின்சாரச் சிட்டைகளை உரிய தினத்தில் செலுத்தத் தவறியமை காரணமாக மொத்தமாக ரூபா 32,873 தண்ட வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வேஉட, பிங்கிரிய மற்றும் எலயாபத்துவ தொழிற்சாலைகளில் பணியாற்றிவருகின்ற உத்தியோகத்தர்களிற்கு பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் படி உரிய தினத்தில் பணிக்கொடையினை செலுத்தத் தவறியமை காரணமாக முறையே ரூபா 48,912, ரூபா 19,035 மற்றும் ரூபா 55,404 மிகைஅறவீடு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உரிய தினத்தில் செலுத்தத் தவறியமை காரணமாக ரூபா 1,700,064 மிகைஅறவீட்டினை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் வங்கி மேலதிகப் பற்று பெற்றுக் கொண்டிருந்தமையால் பற்று வட்டியாக ரூபா 18,769 செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருப்பு

கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருப்பு தொடர்பில் சிக்கலான நிலையொன்று காட்டப்பட்டதுடன் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை துரித பின்னடைவைச் சந்தித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **மிகை / (பற்றாக்குறை)** | **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபத்தன்மையின் அதிகரிப்பு / (பின்னடைவு)** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2007 | (20,429,672) | 5,584,596 |
| 2008 | (42,869,337) | (22,439,665) |
| 2009 | (63,010,358) | (20,141,021) |
| 2010 | (77,259,222) | (14,248,864) |
| 2011 | (104,172,501) | (26,913,279) |

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இலாபத்தன்மையின் பின்னடைவு 34.84% ஆகும்.

(ஆ) பல வருடங்களாக வங்கி மேலகப்பற்று மீதி காணப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் அம்மீதி ரூபா 1,094,525 ஆகும்.

(ஆ) அங்கீகரித்த பதவியணி ஒன்றின்றி நிறுவனம் இயக்கிச் செல்லப்படுகின்றமை.

## 5. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நாளதுவரையாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதிலுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தவறப்பட்டிருந்தது.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைக் கூட்டம் நடாத்தப்படாதிருப்பின் உடனடியாக அச்சபையினை உரியபடி தாபித்து அது காலக்கிரமமாக கூடப்படுவதனை உறுதிப்படுத்தி அச்சபையின் பரிந்துரைகளை பின்தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டங்களை நடாத்துவதற்கு கூட்டுத்தாபன முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்கள், செலவினங்களிற்கும் உள்ளபடியான வருமானங்கள், செலவினங்களிற்குமிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பாதிடப்பட்ட தொகைகள் மற்றும் உள்ளபடியான தொகைகளிற்கிடையே காணப்பட்ட நூற்றுவீதம் 5% இலிருந்து 853% வரையான வீச்சில் நிலவியது.

### 5.5 கொள்வனவுத் திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வங்கிக் கணக்குகளை பேணிச் செல்லல்

(ஆ) முதலீடுகள்

(இ) முற்பணங்கள்

(ஈ) கடன்பட்டோர்

(உ) தொழிற்சாலைகளை நடாத்திச் செல்லல்

(ஊ) இருப்புப் பதிவேடுகளை பேணிச் செல்லல்